

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செயல்படுத்தப்படும் 363ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் செயல்படுத்துவது குறித்து குறுக்குச்சாலை,சந்திரகிரி உள்ளிட்ட ஊர்களில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர், கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். உடன் தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி,ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், எப்போதும் வென்றான் சோலைசாமி, திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் முத்துக்குமார், வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் முத்துராஜ், வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ்பாண்டியன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



திட்டக்குடி அருகே அரங்கூர் லப்பைகுடிக்காடு கிராமத்தில் இடையே உள்ள வெள்ளாற்றில் 8 கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் தரை பாலம் அமைக்கும் பணியை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் துவக்கி வைத்தார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### கடலூர் மாவட்டத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில்

# உரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் அமைக்கும் பணி!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், நவ.15-

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், காட்டு மன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச் செல்வன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் கடலூர், செம்மண்டலம் கரும்பு ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் உரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் அமைக்கும் பணியினை 12.11.2025 அன்று தொடங்கி வைத்தார்.

இதில் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தெரிவித்தாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப் பேற்றது முதல் வேளாண்மை உழவர் நலத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கையினை ஆண்டு தோறும் தாக்கல் செய்யப்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடவும், விளைநிலங்களின் பரப்புகளை அதிகரித்திடவும் விவசாயிகளின் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை இடைத்தரகர்கள் குறுக்கீடின்றி நேரடியாக விற்று பயன்பெறும் வகையில் உழவர் சந்தைகள், தினசரி அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் விவசாயிகளின் விளைப்பொருட்கள் நேரடியாக விற்பனை செய்து, அதற்கான தொகை அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக பெற்று பயனடைந்து வருகின்றனர்.

செம்மண்டலம் கரும்பு ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி (மண் நலன் மற்றும் வளம்) திட்டத்தின் கீழ் ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிய உரக்கட்டுபாடு ஆய்வகம் அமைப்பதற்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

உரக்கட்டுபாடு ஆய்வகம் அமைவதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து பெறப்படும் உர மாதிரிகளை பகுப்பாய்வு செய்ய பயன்படும். இந்த ஆய்வகம் மூலம் உரங்களை உடனடியாக பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கப் படும். பகுப்பாய்வு மேற்கொள்வதன் மூலம் விவசாயிகளுக்கு தரமான உரங்களை விநியோகம் செய்வதை உறுதி செய்யப் படும். பெறப்படும் உர மாதிரிகளை ஆய்வு செய்து அதன் தரத்தில் குறைபாடு கண்டறியும்பட்சத்தில் சம்மந்தப்பட்ட உர நிறுவனத்தின் மீது தகுந்த மேல்நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் விற்பனைக்கு தடை விதிக்கப்படும் என வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணைமேயர் பா.தாமரைச்செல்வன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் மு.லெட்சுமிகாந்தன், உதவி இயக்குநர் சு.சுரேஷ், துறை சார்ந்த அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பீகார் தேர்தல் நிலவரம்!

பீகார், நவ.15-

பீகார் சட்டப்பேரவையில் மொத்தமுள்ள 243 தொகுதிகளில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி காலை 8 மணி முதல் தொடங்கி நடை பெற்றது.

மாநிலம் முழுவதும் உள்ள 46 மையங்களில் வாக்கு எண்ணிக்கை நடந்தது. முதலில் தபால் ஓட்டுகள் எண்ணப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மின்னணு இயந்திர வாக்குகளும் எண்ணப்பட்டன.

பிற்பகல் 3.30 மணி நிலவரப்படி, ஐக்கிய ஜனதா தளம் பா.ஜ.க. கூட்டணி 200 இடங்களில் முன்னிலையில் உள்ளது. ஆர்.ஜே.டி. காங்கிரஸ் கூட்டணி 37 இடங்களில் முன்னிலை வகித்தது.

# தமிழ்நாட்டில் - 16ஆம் தேதி முதல் 4 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு!

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, நவ.15-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளையும் (நவ.14), நாளை மறுதினமும் தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களிலும், 16 முதல் 18ஆம் தேதி வரை ஒருசில இடங்களிலும், 19ஆம் தேதி பெரும்பாலான இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழ்நாட்டில் 16ஆம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்களிலும், 17ஆம் தேதி டெல்டா மாவட்டங்கள் மற்றும் கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலும், 18 ஆம் தேதி தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 19ஆம் தேதி கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழ்நாட்டுக் கடலோரப் பகுதிகளில் நாளை தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிமீ வேகத்திலும், இடையிடையே 55 கிமீ வேகத்திலும் வீசக்கூடும் எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழ்நாட்டில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 9 செமீ, நாலுமுக்கு, காக்காச்சி, மாஞ்சோலையில் தலா 7 செமீ, தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் 6 செமீ, தென்காசி மாவட்டம் அடவிநயினார் அணை, திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம், மூலைக்கரைப் பட்டியில் தலா 5 செமீ, திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் 4 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு மீனவர் நல

# வாரியத் தலைவராக ஏ.ஜோசப் ஸ்டாலின் நியமனம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ. 15 -

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், புதிய உறுப்பினர்களை நியமித்து அரசு உத்தரவு அளித்துள்ளது. தமிழகத்தில் மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடும் மீனவத் தொழிலாளர்களின் விரிவான சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களது நலனை பேணும் பொருட்டும், கடந்த 2007ம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அமைக்கப் பட்டது.



உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்தது. தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளபடி அலுவல் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களை இரண்டாண்டு காலத்திற்கு நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

மேற்படி நியமனம் செய்யப்பட்ட, தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் தலைவர் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு பதவி வகிப்பர்.

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் தலைவராக கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், ஏ.ஜோசப் ஸ்டாலின் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அலுவல் சாரா உறுப்பினர்கள்: ஏ. தாஜுதீன், என்.ஜெ. போஸ், பி. அந்தோணி ஸ்டாலின், ஏ. ஜோஸ், வி. செல்வபாரதி, ஆர்.வி. கணேஷ், ஏ.பி. பன்னீர்செல்வம், எம். முருகன், எக்ஸ். லெனின், கோ. மனோகரன், எம். ஜெபமாலை பர்னாந்து, ஜேசுராஜா, பி.எஸ். ஜேசுராஜ் (எ) ராஜா, ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர். தமிழ்நாடு மீனவர் நல வாரிய உறுப்பினர் செயலர் என்ற முறையில் நல வாரியத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பார். இந்நல வாரியம் முதல் தரமான குழுவாகக் கருதப்படும். அலுவல் சாரா உறுப்பினர்களின் அகவிலைப்படி மற்றும் பயணப்படி போன்றவற்றிற்கு வாரியத்தின் உறுப்பினர் செயலரால் ஒப்பளிக்கப்பட வேண்டும். வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் அரசு பதவிகளில் இருந்தால், அவர்கள் நல வாரியத்திலிருந்து ஏனைய பயன்பாடுகளை பெறமுடியாது.

### செஞ்சியில் குழந்தைகள் தின விழா!

# செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. குழந்தைகளுக்கு இனிப்பு - கல்வி உபகரணங்கள் வழங்கினார்!

செஞ்சி, நவ 15-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி காந்தி பஜாரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள் விழா முன்னிட்டு பள்ளியில் குழந்தைகள் தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எல்.எல்.ஏ.கலந்து கொண்டு குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் கல்வி உபகரண பொருட்களை வழங்கி குழந்தைகளுக்கு வாழ்த்து தெரிவித்து சிறப்புரையாற்றினார்.

அப்போது முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.பேசுகையில்:

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது முன்னாள் பிரதமர் நேருவை மாமா என்று அழைத்தனர்.அந்த வகையில் இன்று தமிழகத்தில் கல்வியின் மூலம் தான் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் உயர்த்த முடியும் என்ற தொலை நோக்கு சிந்தனை யுடன் கல்விக்கு தனி கவனம் செலுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கல்வித்துறைக்கு பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தி வருகிறார்.

உயர்கல்வியில்படிப்பதற்காகவும் வெளிநாட்டில் சென்று படிப்பதற்கா வழிவகை செய்கின்ற திட்டங்களாகவும், வெளிநாடுகளுக்கு சென்று படிக்கும் மாணவர்களுக்கு36 லட்சம் ரூபாய் வழங்கி உள்ள தமிழ்நாடு முதலமைச்சரை பார்த்தவுடன் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் முதலமைச்சரை அப்பா அப்பா என்று பெரு மகிழ்ச்சியுடன் அழைப்பதாக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பெருமைப்பட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், நகர செயலாளர் கார்த்திக், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் பொன்னம்பலம், சுமித்ரா சங்கர்,தலைமை ஆசிரியர் ஆயிஷா பேகம், நிர்வாகிகள்மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரசூல் பாஷா, தொண்டரணி பாஷா, கோகுல், அறிவழகன் உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை டி. சுந்தரம்

### நவம்பர் 15 (2012)



புதுக்கோட்டை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவரான இவர், 25 ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகத் துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராக தொடர்ந்து 25 ஆண்டுகளாக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுக்கோட்டை அர்பன் கூட்டுறவுப் பண்டகச் சாலையில் தொடர்ந்து இயக்குநராகவும் – ஒருமுறை துணைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“உழைப்பும், தியாகமும், நேர்மையும் இருந்தால் மட்டுமே உள்ளூரில் தொடர்ந்து நகர்மன்ற உறுப்பினராக வரமுடியும் என்பதை நிருபித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெங்கிடங்கால் சந்தானம்

### நவம்பர் 15 (2005)



நாகை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.

நெருக்கடி நிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.

கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

1967ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது தலைவர் கலைஞர்மீது மாற்றுக் கட்சியினர் தாக்குதல் நடத்தியபோது கலைஞரை உடனிருந்து பாதுகாத்தவர்களில் இவரும் ஒருவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**